பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

16 10 2025 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ராணுவத்திற்கு 659 கோடி ரூபாய் மதிப்பில் நவீன ரக துப்பாக்கிகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

2. நக்சல் தீவிரவாதத்தை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முற்றிலும் அகற்ற உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

3. அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கு 2024-25ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இன்று தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்த நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்துள்ளது.

5. டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ராணுவத்திற்கு 659 கோடி ரூபாய் மதிப்பில் நவீன ரக துப்பாக்கிகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இரண்டு நிறுவனங்களுடன் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நவீன ரக துப்பாக்கிகள் பிரத்யேகமாக இரவில் பயன்படுத்தக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் 500 மீட்டர் தொலைவிலான இலக்கை துல்லியமாக தாக்கக்கூடிய திறன் கொண்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிகளின் உற்பத்தியில் 51 சதவீதத்திற்கும் மேலானவை உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது என்றும், இது பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் சுயசார்பை எட்டிய முக்கிய நடவடிக்கை என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிகளை தயாரிப்பதற்கான உபகரணங்களை உற்பத்தி செய்யும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இந்த ஒப்பந்தத்தில் மூலம் பயன்பெறும் என்றும் பாதுகாப்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நக்சல் தீவிரவாதத்தை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முற்றிலும் அகற்ற உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், நாட்டை நக்சல் தீவிரவாதம் இல்லாத வகையில் கட்டமைக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.

நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 6-ல் இருந்து 3ஆக குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கட் மாநிலத்தில் உள்ள பிஜப்பூர், சுக்மா, நாராயண்பூர் ஆகிய 3 மாவட்டங்கள் மட்டுமே தற்போது நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 955 பணியாளர்களுக்கு 2024-25ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மொத்தம் 175 கோடியே 51 லட்சம் ரூபாய் போக்குவரத்து பணியாளர்களின் வங்கிக் கணக்கில் நேற்று செலுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள 16 கூட்டுறவு மற்றும் இரண்டு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 2024-25ஆம் ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கப்பட உள்ளதாக மாநில சர்க்கரைத்துறை அமைச்சர் திரு. ஆர். ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இது குறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மொத்தம் 5 ஆயிரத்து 308 தொழிலாளர்களுக்கு 3 கோடியே 53 லட்சம் ரூபாய் வழங்கப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாநிலம் முழுவதும் நேற்று லஞ்சம் ஒழிப்புத்துறையினர் பல்வேறு இடங்களில் சோதனை மேற்கொண்டு கணக்கில் காட்டப்படாத பணத்தை பறிமுதல் செய்தனர்.

நீலகிரி மாவட்டம் உதகை தெற்கு வனச்சரக அலுவலரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத 5 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

கரூர் மாவட்டம் குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் 3 லட்சம் ரூபாயும், திருச்சி கே.கே. நகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் 20 ஆயிரம் ரூபாயும் பறிமுதல் செய்யப்பட்டது.

விழுப்புரம் சரக போக்குவரத் துணை ஆணையர் அலுவலகம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 25 ஆயிரம் ரூபாயும் பறிமுதல் செய்யப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கில் காட்டப்படாத 77 ஆயிரம் ரூபாயும், 20க்கும் மேற்பட்ட பட்டுப்புடவைகளையும் லஞ்ச ஒழிப்புக் காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை இன்று தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்த நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நள்ளிரவில் கனமழை பெய்தது.

அம்மாவட்டத்திற்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாசன குளங்கள் நிரம்பியுள்ளன.

மழை காரணமாக விவசாயிகள் கும்பப் பூ சாகுபடி பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

இலங்கை பிரதமர் திருமதி ஹரினி அமரசூர்யா இரண்டு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**<<<<>>>>**

மடகாஸ்கரில் தாம் விரைவில் அதிபர் பொறுப்பை ஏற்க இருப்பதாக அந்நாட்டு ராணுவத் தலைவர் திரு. Michael Randrianirina அறிவித்துள்ளார்.

**<<<<>>>>**

வெனிசுலா கடல் பகுதியில் அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 6 பேர் கொல்லப்பட்டனர்.

<<<<>>>>

இந்திய பொருட்கள் மீது 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது, இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பில்லை என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

Fastag வருடாந்திர அனுமதிச் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்ட 2 மாத காலத்தில் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 25 லட்சத்தைக் கடந்துள்ளது.

<<<<>>>>

தீபாவளி பொனான்ஸா என்ற பெயரில் ஒரு ரூபாய் கட்டணத்தில் ஒரு மாத கால சேவை வழங்கும் ப்ரீபெய்ட் திட்டத்தை பி.எஸ்.என்.எல். அறிமுகம் செய்துள்ளது.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் பள்ளி மாணவர்களுக்கு விபத்தில்லா தீபாவளியைக் கொண்டாடுவது குறித்த விழிப்புணர்வு செயல் விளக்கம் தீயணைப்பு படையினரால் நடத்தப்பட்டது.

<<<<>>>>

நாகப்பட்டினம் மாவட்டம் செல்லூர் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் 200 கிலோ போதைப்பொருட்களை பறிமுதல் செய்த காவல்துறையினர் ஒருவரைக் கைது செய்தனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை ஆட்சியர் திரு. பிரதாப் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

சென்னை எழும்பூரில் இருந்து பிஹார் மாநிலம் பரோனிக்கு இன்று இரவு மணி 11.55க்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 10-21, 21-8, 21-18 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் Nhat Nguyen-ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை 17-21, 21-11, 21-17 என்ற செட் கணக்கில் ஸ்காட்லாந்தின் கிரிஸ்டோஃபர் கிரிம்லே - மாத்யூ கிரிம்லே இணையை வென்றது.

<<<<>>>>

மலேசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சதீஷ்குமார் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர், 19-21, 21-18, 21-12 என்ற செட் கணக்கில் மலேசியாவின் Sholeh Aidil-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் Isharani Baruah - அஸர்பைஜானின் Kaisha Fathima-வை வென்றார்.

<<<<The End>>>>